**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் 2018**

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. "பனியால் குளம் நிறைதல் இல்" எனும் பழமொழியின் கருத்து யாது?
2. எச்செயல்கள் செய்வதற்கு எளிமையானது?
3. திருக்கோவையார் என்ற நூலின் ஆசிரியர் யார்?
4. அபிராமியின் கடைக்கண் என்னவெல்லாம் தரும்?
5. மனவாழ்க்கை சிறக்கக் காரணமாக விளங்குபவை எவை?
6. கிளியின் வேறு பெயர் இரண்டினைக் குறிப்பிடுக.
7. சிறிய திருமடலில் மூன்று உறுதிப் பொருள்கள் எவை?
8. தமிழில் முதல் சதக நூலாகச் சொல்லப்படுவது எது?
9. இன்னா நாற்பதின் ஆசிரியர் யார்?
10. நல்லவருக்கு செய்த உதவி எதைப் போன்றது?
11. கட்டு என்றால் என்ன?
12. உலா இலக்கணத்தை முதலில் கூறிய நூல் எது?
13. குறத்தியின் கணவர் பெயர் என்ன?
14. ஊசல் என்ற உறுப்பில் நந்திவர்மன் போர் செய்த இடம் எது?
15. செல்வம் உடையவர்களின் கடமை யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. அறம் – விளக்குக.
2. பிற்கால அற நூல்கள் யாவை? அவை தோன்ற காரணங்கள் யாவை?
3. மடல் இலக்கியம் எங்ஙனம் அறிமுகம் செய்யப்படுகிறது?
4. சமயம் தழுவிய பரணி நூல்கள் குறித்து எழுதுக.
5. பழமொழி நானூறு முயற்சி பற்றி எங்ஙனம் விளக்குகிறது?
6. உலக நீதி கூறும் அறக்கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.
7. கோவை இலக்கியம் பற்றி விளக்குக.
8. உடன்போக்கு பற்றி விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மூவருலா பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) குமர குருபரர் வழி கல்வி பற்றி விவரிக்க.

2. (அ) குறவஞ்சி இலக்கியத்தில் வசந்த வல்லி குறித்தும் சிங்கனின் வருகை பற்றியும் விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாலடியார் துறவறம், நிலையாமை பற்றி கூறப்படுவனவற்றை விவரிக்க.

3. (அ) இனியவை நாற்பதில் ஒழுக்க நெறி குறித்து கூறப்படுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) முக்கூடற்பள்ளுவில் உழவர் வாழ்க்கை பற்றி விவரிக்க.

***